# பதியதலாவ பிரதேச சபை
# அம்பாறை மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2011 ஏப்ரல் 01 அன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2010 நவம்பர் 16 அன்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரீசீலனைகளிருந்து தென்படுவதும் எனக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அதி உயர் தகவல்களுக்கும் அமைய பதியதலாவ பிரதேச சபையின் 2010 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்கீட்டு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிசார் கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைத்தவிர, 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பதியதலாவ பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்பான நிலைமை மற்றும் அத் தினத்தில் முடிவுற்ற அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளது நிதிசார் விளைவுகள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தென்படும் விதத்தில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கிசைய நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளனவென்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இணங்காமை

கீழே காணப்படும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் ஆகியவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| **(அ) 1988 பிரதேச சபை (நிதியும் நிர்வாகமும்) விதிகள்** | |
| (i) விதி 13 | வரவு, செலவுத் திட்டத்தின் சான்றுறுதிப்படுத்தப்பட்ட பிரதி ஒன்று நிதியாண்டு ஆரம்பமாவதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்கப்படவில்லை. |
| (ii) விதி 17 | அடியிதழ் சேர் புத்தகப் பதிவேடு பிஎஸ் 21 க்கமைய பேணப்படவில்லை. |
| (iii) விதி 29 | சேகரிக்கப்படும் பணம் நாளாந்தம் வங்கியிலிடப்படவில்லை. |
| (iv) விதி 164 | தொடர்புடைய கணக்கீட்டு ஆவணங்கள் செயளாலராலோ அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவராலோ நாளாந்தம் பரீசீலிக்கப்படவில்லை. |
| (v) விதி 168(1) | முன்னைய ஆண்டின் கணக்குகளது பொழிப்பின் பிரதி ஒன்று பெறுவனவு மற்றும் கொடுப்பனவு உறுதிச் சான்றுகளது வகைப்படுத்தல் கூற்றுடன் ஒவ்வொரு ஆண்டும் மாாச் 31 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| **(ஆ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம்** | |
| 387 | பிரதான காசேட்டு மீதி வங்கிப்பற்றுடன் காணப்பட்டது. |

## 2. நிதி, செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2010 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் வருவாயிலும் கூடிய மீண்டுவருஞ் செலவினம் ரூபா 1,043,722 ஆகும். இதற்கெதிரான முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 1,546,048 ஆகும்.

### 2.2 வருவாய் நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன

தலைவரால் மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமெனச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய் விடயம் | 2010 மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட மீதி | 2009 மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட மீதி |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா "000 | ரூபா "000 | ரூபா "000 | ரூபா "000 | ரூபா "000 | ரூபா "000 |
| (i) | தீர்வையும் வரியும் | - | 3 | - | - | - | - |
| (ii) | குத்தகை வாடகை | 1,462.5 | 872 | 590.5 | 1,486 | 1,108 | 436 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 330 | 312.9 | 17.1 | 230 | 265 | - |
| (iv) | பிற வருவாய் | 5,797.9 | 5,572.7 | 225.2 | 410 | 541 | - |

#### 2.2.2 நீதிமன்றத் தண்டப் பணம்

பல்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் மஜிஸ்டிரேட் நீதிமன்றத்தால் 2010 டிசெம்பர் 31 வரை அறவீடு செய்து தலைமைச் செயளாளருக்கு அனுப்பி வைக்கப்பட்ட ரூபா 958,002 தண்டப் பணம் சபைக்குக் கிடைக்க வேண்டியுள்ளது.

### 2.2.3 முத்திரைக் கட்டணம்

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து பெற வேண்டிய முத்திரைக் கட்டணப் பெறுமதி சமர்ப்பிக்கப்படவில்லை.

### 2.2.4 குத்தகை வாடகை

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 164,710 குத்தகை வாடகை வருவாயை அறவிடுவதற்குப் போதுமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.3 செலவின அமைப்பு

சபையின் மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் வரவு, செலவுத் திட்டமிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினம், வேறுபாடுகளுடன் கீழே காணப்படுகின்றன.

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| செலவின விடயம் | வரவு, செலவுத் திட்டமிடப்பட்டது. | உள்ளபடியானது | வேறுபாடு | வரவு, செலவுத் திட்டமிடப்பட்டது. | உள்ளபடியானது | வேறுபாடு |
| **மீண்டுவருஞ் செலவினம்** | **ரூபா "000** | **ரூபா "000** | **ரூபா "000** | **ரூபா "000** | **ரூபா "000** | **ரூபா "000** |
| ஆளுக்குரிய வேதனம் | 5,926 | 5,723 | 203 | 5,926 | 5,435 | 491 |
| ஏனையவை | 1,559 | 2,018 | (459) | 1,559 | 1,604 | (45) |
| உப மொத்தம் | 7,485 | 7,741 | (256) | 7,485 | 7,039 | 446 |
| மூலதனச் செலவினம் | - | 28,288 | (28,288) | - | 11,461 | (11,461) |
| நிகர மொத்தம் | 7,485 | 36,029 | (28,544) | 7,485 | 18,500 | (11,015) |

### 2.4 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர்**

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| ஊழியர் தரம் | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளபடியானது |
|---|---|---|
| நிறைவேற்று தரம் | 1 | 1 |
| இரண்டாந் தரம் | 11 | 4 |
| ஆரம்ப தரம் | 11 | 13 |
| பிற (சமயாசமய, தற்காலிகம்) | 3 | 2 |

## 2.5 சொத்து முகாமைத்துவம்

### அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன்

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய ஊழியர் கடன் முற்பண மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 1,882,039 ஆகும்.

## 2.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ) காசோலைக் கொடுக்கல் வாங்கல்களின் போது குறித்த நிறுவனத்தின் பெயருக்கு அவை வரையப்பட வேண்டுமாயினும், வேலைக் கணக்குக் கொடுப்பனவிற்குக் பணக் காசோலை வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) 2010.06.30 அன்றைய ரூபா 30,000 கொடுப்பனவிற்குக் கொடுப்பனவு உறுதிச் சான்று சமர்ப்பிக்கப்படவில்லை. காசோலை அடியிதழிலும் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

## 2.7 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தில் போதிய உள்ளகக் கணக்காய்வு இடம்பெறவில்லை

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிதிக் கட்டுப்பாடு